உழவர்கரை நகராட்சி
புதுச்சேரி-5

தேதி: 02/11/2021.

## செய்தி குறிப்பு

உழவர்கரை நகராட்சி பகுதிகளில் நிறைய காலி மனைகள் அதன் உரிமையாளர்களால் சரியாக பராமரிக்கப்படாமல் சுற்றியுள்ளவர்களுக்கு சுகாதாரக் கேடு விளைவிக்கும் வகையில் உள்ளன. இக்காலி மனைகளின் உரிமையாளர்க மீது நடவடிக்கை கோரி பொதுமக்கள் நகராட்சியை அணுகுகின்றனர். காலிமனைகளின் உரிமையாளர்கள் பற்றிய குறிப்புகள் நகராட்சியால் பராமரிக்கப்படுவதில்லை. இதனால் மேற்படி உரிமையாளர்களை விசாரணைக்குப்பிறகு கண்டறியப்பட்டு அவர்களுக்கு நகராட்சி சார்பில் காலிமனைகளை சுத்தம் செய்து பொது சுகாதாரத்திற்கு அச்சுறுத்தல் இல்லாத வகையில் பராமரிக்குமாறு அறிக்கை தரப்படுகிறது. சில உரிமையாளர்கள் நகராட்சியின் அறிக்கைக்கு பிறகு தங்களின் காலி மனைகளை பராமரிக்க தொடங்கியுள்ளனர்.

எனவே உழவர்கரை நகராட்சி பகுதியில் காலி மனைகள் வைத்திருப்பவர்கள் உடனடியாக அதை சுகாதாரமாக பராமரிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. பராமரிக்காதவர்களின் விபரம் நகராட்சியால் சேகரிக்கப்பட்டு அவர்களுக்கு அறிவுறுத்தல் அனுப்பப்படுகிறது. அப்படி நகராட்சியின் அறிவுறுத்தலுக்கு பிறகு தங்களின் காலி மனைகளை பராமரிக்காத நபர்கள் மீது சட்டரீதியான நடவடிக்கை எடுக்க மாவட்ட துணைநீதிபதிக்கு நகராட்சியால் பரிந்துரை செய்யப்பட்டு துணை மாவட்ட நடுவர் நீதிமன்றத்தில் இந்திய குற்றவியல் சட்டம் பிரிவு *133*-ன் கீழ் காலிமனை உரிமையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டும் என தெரிவிக்கப்படுகிறது..

காலிமனைகள் பற்றிய புகார்கள் தருபவர்கள், காலிமனைகளின் உரிமையாளர்கள் பற்றிய விபரங்களோடு தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. புகார் அளிக்க நகராட்சி கட்டுப்பாட்டு அறை எண். *: 2200382* வாட்ஸ் அப் எண்.*: 7598171674.*

**ஆணையர்**
**உழவர்கரை நகராட்சி**

---

மேற்படி செய்தியை தங்கள் பத்திரிக்கையில் வெளியிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**ஆணையர்**
**உழவர்கரை நகராட்சி**